
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

ல்: 123 | வள்ளுவர் ஆண்டு 2054 | வியாழக்கிழமை 04.01.2024 | பக்கங்கள் 10



# ஈழத்தேசிய விடுதலையை ஆழ நேசித்தவர் விஜயகாந்த்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு!

பக்கம் 4




பக்கம் 8

# வட்டுக்கோட்டை இளைஞரின் மரணம் மனித ஆட்கொலை!

## 21 சாட்சியங்கள், வைத்திய அறிக்கையின் அடிப்படையில், யாழ். நீதிவான் கட்டளை!

## செங்கடலை பாதுகாக்க புறப்படும் சிறிலங்கா கடற்படை!




பக்கம் 3

## எங்களிடம் “டீல்” அரசியல் இல்லை! சஜித் சூளுரை!



பக்கம் 8

# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களை, தற்போதைய வரி மேலும் துன்புறுத்துகிறது!



பக்கம் 9

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு!



பக்கம் 3

# வற் வரிக்கு தண்டம் அறவிடுவது சட்டவிரோதம்! ரெலோ குற்றச்சாட்டு!

## எம் கே.சிவாஜிலிங்கம், எதிர் கட்சித் தலைவர் எடப்பாடியிடையே அரசியல் சந்திப்பு!

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடந்த சில நாட்களாக தமிழ் நாட்டில் தங்கியிருந்து ஈழத்துக்கான பல அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், தற்போதய எதிர்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி அவர்களை சந்தித்திருந்தார். மேலும் மறைந்த கேப்டன் விஜயகாந்த் அவர்களின் இறுதி நிகழ்விலும் தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பில் நேரில் சென்று இறுதி அஞ்சலியை செலுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!

# ஆசிரியர் பீடம்



தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## ஏற்றுக் கொள்ள மறுக்கும் சமூகம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தமிழர்கள் மீது நடத்திய போரும் அதற்காகச் செலவிட்ட பெருந்தொகைப் பணமும்தான் காரணம் என்பதனை நாம் ஒவ்வொருவரும் மறந்துவிடுகிறோம். நாம் மறந்து விடுவது பரவாயில்லை என்றாலும் பெரும்பான்மை சமூகம் மறப்பதுதான் வேடிக்கை. இதற்குத்தான் கணக்குப் பார்க்க வேண்டும் என்று சொல்வார்கள்.

ஏற்கனவே வற்வரி விதிக்கப்பட்டிருந்தாலும் 2019ஆம் ஆண்டில் 69லட்சம் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியான கோத்தபாய ராஜபக்ச வற்றை 8 வீதமாக குறைத்திருந்தார். அதே நேரத்தில் வருமான வரி செலுத்துவதற்கும் பல விலக்களிப்புகளைக் கொடுத்திருந்தார். இந் நடவடிக்கை ஒரு பெருந்தொகை வருமான இழப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், 2022 ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க வற் வரியை 15 வீதமாக மாற்றியிருந்தார். ஆனால் இவ்வருடம் முதல் அது 18 வீதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கும் ஜனாதிபதிக்கும் ஆதரவான தரப்புகள் வெறும் 3 வீதமே அதிகரிப்பு என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போகும் நிலை ஒன்று இருக்கிறது. ஆனால், கடந்த காலங்களில் இருந்ததனைவிடவும் இம்முறை மேலதிகமான பொருட்கள் வற் வரிக்குள் வந்து சேர்ந்திருக்கின்றன. அதாவது பாடசாலை உபகரணங்கள் அடங்கலான அத்தியாவசியப் பொருட்கள் இதற்குள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆடம்பரத்துக்கான, கட்டாயமற்ற, தேவையற்ற என்றிருந்த நிலை மாறி அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்துபவர்களும் இதிலிருந்து தப்பிக்கமுடியாத நிலைமை தோன்றியிருக்கிறது. இதனை மிகச் சாதாரணமாக யாரும் கடந்துவிடமுடியாது என்பதே இதன் தார்ப்பரியம். இதுதான் இலங்கை அரசு மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற புத்தாண்டுப் பரிசு.

இந்தப் பரிசை காலாகாலமாக தங்களது உரிமைக்காகப் போரடிய தமிழர்களும் சேர்ந்துதான் அனுபவிக்கவேண்டிய நிலை. இந்தக் கடுமையான வரியை தங்கள் சக்திக்கு மீறி ஏற்றுக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலங்களில் வெளிநாடுகளில் கடன்களையும் உதவிகளையும் குவியல் குவியலாகப் பெற்றுக் கொண்ட அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கொட்டித் தீர்த்தது. தன் சொந்த நாட்டு மக்கள் மீதே கொத்துக் குண்டுகளையும், எறிகணைகளையும் வீசி, விமானங்கள் மூலமாகத் தாக்குதல்களை நடத்தி அவர்களது வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் அழித்திருந்தது.

2009 யுத்தம் மொனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் அக்கடன்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல் கடைசியில் இறுமாப்புடன் சேர்ந்து எதுவும் செய்யமுடியாத நிலையைத் தோற்றுவித்தது. இறுதியில் நாமும் சேர்ந்தே அக்கடன்களை அடைக்கவேண்டியதாகியிருக்கிறது.

அரகலய நடைபெற்ற போது நாம் இதற்குள் எதற்கென்று ஒதுங்கியிருக்கும் மனோநிலையிலேயே தமிழர்கள் இருந்தனர். ஆனால், அதன் பின்னர் ஏற்பட்ட நிலைமையின் கோரம் சேர்த்துக் கொண்டே நம்மை நெருக்குகிறது. விரும்பினாலும், விருப்பமில்லையானாலும், ஏற்றுக் கொண்டாலும் இல்லையானாலும் நம்மீது தொடுத்த போரின் சுமையையும் நாமே சேர்ந்து சுமக்கவேண்டியிருக்கிறது என்பதே உண்மை.

இருந்தாலும் அதற்காக ஏற்பட்ட செலவை சீர் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் புலம்பெயர் தமிழர்களையே பெரும்பாலும் எதிர்பார்க்க வேண்டிய நிலை ஆட்சி பீடத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றாலும், உலக வங்கியிடம் கடன் பெற்றாலும் அதனை அடைக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வருவரிடமும்தான் இருக்கிறது என்பதனை நாம் ஒவ்வொருவருவரும் மறந்துவிடலாகாது.

ஆனாலும், வருமானமின்றி வரியைச் செலுத்த வேண்டும். பெரும் இன்னல்களை எதிர்கொள்கிறோம் இருந்தாலும், இனவாதத்தை மாத்திரம் விட்டொழிக்கமாட்டோம் என்பவர்களிடம் நாம் எதனை எதிர்பார்க்கிறோம்.

தேசியம்
பத்திரிகையில்
உங்கள்
விளம்பரங்களை
பிரசுரிக்க
தொடர்பு
கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339



# செங்கடலை பாதுகாக்க சிறிலங்கா கடற்படையை அனுப்புகிறார் ரணில்!



செங்கடலைப் பாதுகாக்கவும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும் சிறிலங்கா கடற்படையை அனுப்பவுள்ளதாக அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். காசா மீதான இஸ்ரேல் படையினரின் தாக்குதலை அடுத்து யேமனில் உள்ள ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் ஊடாக பயணிக்கும் கப்பல்களுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர். ஹவுத்தி கிளச்சியாளர்களின் அச்சுறுத்தல்

குறிப்பாக கப்பல்களை கடத்துதல் அவற்றின் மீது தாக்குதல் நடத்துதல் போன்ற பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு பின்புலமாக ஈரான் உள்ளதாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

செங்கடலைப் பாதுகாக்கும் பணியில் சிறிலங்கா கடற்படை

இந்த நிலையில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல்கள் காரணமாக செங்கடல் ஊடாக வர வேண்டிய கப்பல்கள் தென்னாபிரிக்காவை சுற்றி வருகின்றன. இதனால் போக்குவரத்து செலவுகள் அதிகரித்து பொருட்கள் விலை அதிகரித்துள்ளன. எனவே செங்கடலைப் பாதுகாக்கும் பணியில் சிறிலங்கா கடற்படையும் இணைந்து கொள்ளும் என அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# ரணிலின் யாழ் விஜயம்: காவல்துறையினரின் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம்!



அதிபர் ரணில் விக்ரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை தடுக்கக் கோரி யாழ்ப்பாண காவல்துறையினர் விடுத்திருந்த கோரிக்கையை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. சட்டத்தை மீறாத வகையில், ஜனநாயக ரீதியில் எதிர்ப்பில் ஈடுபடுவதற்கான உரிமை உள்ளதாகவும் நீதிமன்றம் இதன்போது அறிவித்துள்ளது.

அதிபர் இன்று (04) முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில், அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு தடை விதிக்கக் கோரியே யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் காவல்துறை வழக்கு தாக்கல் செய்திருந்தனர். வழக்கு தாக்கல் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை பிறப்பித்திருந்த உத்தரவிற்கு அமைய, வழக்கின் 8 ஆவது பிரதிவாதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதிமன்றத்தில் இன்று முன்னிலையாகி தமது நிலைப்பாட்டினை தெளிவுப்படுத்தியிருந்தார்.

# வற் வரிக்கு தண்டம் அறவிடுவது சட்டவிரோதம்: ரெலோ குற்றச்சாட்டு!

**18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான வற் வரிக்கு விண்ணப்பம் செய்யாதவர்களுக்கு தண்டப்பணம் அறவிட முடியாது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.** ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். வற் வரிக்கு விண்ணப்பம் அவர் மேலும் தெரிவிக்கையில்,"இம்மாதம் ஜனவரி மாதம் முதல் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தமது பெயர்களைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இலங்கையில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம். ஆனால் பதிவு செய்யாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும் என்பது சட்டவிரோதம் ஆகும்.

ஏனெனில் இலங்கையில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுபவர்கள் கட்டாயம் வரி செலுத்த வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. தண்டம் என கூறுவது சட்ட விரோதம் இந்நிலையில் 18 வயதிற்கு மேற்பட்ட எல்லோரும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்களாக கருத முடியாது. வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் வரி செலுத்த முடியாது அவர்களின் வருமானம் அதிகரிக்கும் போது வரி செலுத்த முடியும் பதிவு செய்யவில்லை என தண்டம் அறவிட முடியாது. அதுமட்டுமல்லாது 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்யாவிட்டால் 50ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படும் என அறிவித்த அரசாங்கம், இவ்வளவு காலமும் வரி வருமானம் செலுத்தாதவர்களுக்கு என்ன தண்டம் என அறிவிக்கவில்லை. ஆகவே இலங்கையில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்வது கட்டாயமாக்குவது நல்ல விடயம் ஆனால் பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் என கூறுவது சட்ட விரோதம்." என தெரிவித்துள்ளார்.

# ஈழத்தேசிய விடுதலையை ஆழ நேசித்தவர் விஜயகாந்த் - சிறீதரன் எம்.பி!






தேசிய முற்போக்குத் திராவிட கழகத்தின் தலைவரும், நடிகருமான விஜயகாந்த் அவர்கள், ஈழத்தேசிய விடுதலையையும், தமிழின விடுதலைப் போராட்டத்தையும், தமிழினத்தலைவர் மேதகு. பிரபாகரன் அவர்களையும் ஆழ நேசித்தவர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின், கிளிநொச்சி நகர வட்டாரக் கிளையினரது ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (02), கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் அவர்களுக்கான நினைவு வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அந்நினைவுரையில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது,

தமது சொந்த நலன்களுக்காக ஈழத்தமிழர்களையும், அவர்களது இனவிடுதலைப் போரையும் பயன்படுத்த முனைந்தவர்கள் மத்தியில், எங்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்பதற்காக தென்னிந்தியத் திரையுலகின் போக்கையே எமக்குச் சாதகமானதாக மடைமாற்ற முயன்று அதில் வெற்றியும் கண்டவராக விஜயகாந்த் திகழ்ந்தார்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக இருந்தபோது, தமிழின விடுதலைப்போரை ஆதரித்து அவர் நடாத்திய உண்ணாவிரதப் போராட்டம், விடுதலைப் போராட்டத்துக்கான நிதி சேகரிப்பு என்பவையும், ஊமைவிழிகள் உள்ளிட்ட திரைப்படங்களைக் கூட ஈழ ஆதரவுக்கான களங்களாக அவர் கையாண்டிருந்தமையும் தமிழக வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத அருஞ்செயல்கள்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் பெருநடிகருமான எம்.ஜி.ஆருக்குப் பின்னர், ஈழத்தமிழர்களுக்கும், அவர்களது போராட்டத்துக்கும் உளமார வலுச்சேர்த்த ஒருவராக விஜயகாந்த் எங்கள் உள்ளங்களில் உயர்ந்து நிற்கிறார். அத்தகைய அர்ப்பணங்கள் தந்த நெகிழ்வின்பால் அவருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகள் - என்றார்.











# கிளிநொச்சியில் வாக்காளர் விண்ணப்பப் படிவம் பூர்த்திசெய்யும் நடவடிக்கை முன்னெடுப்பு!





நாட்டில் பல பகுதிகளிலும் கிராம சேவையாளர் பிரிவுகளில் வாக்காளர் விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்யும் வேலை திட்டம் 02.01.2024ம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வாக்காளர் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளில் நேற்றைய தினம்(03) வாக்காளர் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், புதிதாக 18 வயது பூர்த்தி அடைந்த அனைவரும்வாக்களர்களாக இணைத்துக் கொள்ளும் விண்ணப்பபடிவமும் இணைத்துக்கொள்ளப்பட்டுவருவதுடன், இறந்தவர்கள் நீக்கம் செய்வதற்கான பணியும் நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சியாக இம்மாதம் முழுவதும் வாக்காளர் விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர். வாக்களார்களின் வீடு வீடாக கிராம சேவையாளர்கள் சென்று வாக்களர் விண்ணப்படிவம் பூர்த்திசெய்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் அதிகரிக்கும் டெங்கு நோய்! துப்பரவற்ற இடங்களுக்கு சிவப்பு பதாகை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய்பரவலை தடுக்க துப்பரவற்ற இடங்களுக்கு சிவப்பு அறிவுறுத்தல் ,ன்று முதல் வழங்கப்பட்டு வருகின்றது.


முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினருடன் இணைந்து பிரதேசசபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள் இராணுவம், பொலிஸார் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை நேற்று (03.01.2024) காலை தொடக்கம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் சடுதியாக அதிகரித்திருப்பதனால் நீர் தேங்கி நுளம்பு குடம்பிகள் பரவக்கூடிய சிறிய பாத்திரங்கள் , பிளாஸ்டிக் பொருட்கள், ஏனைய நீர் தேங்கி நிற்ககூடிய பொருட்களை அகற்றுமாறும், டெங்கு அபாய நிலையினை கருத்திற்காண்டு மக்களை செயற்ப்படுமாறும்

சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்யப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







சண்முகம் தவசீலன்

# கிளிநொச்சி மாவட்டச் செயலக வருட ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டு விழாவும்!



கிளிநொச்சி மாவட்டச் செயலக 2023ம் ஆண்டுக்கான வருடாந்த இறுதி ஒன்றுகூடலும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிற்கான சேவை நலன் பாராட்டு விழாவும் (02) செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்க தலைவர் லி.கலாஜினி அவர்களின் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.
இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், ஊழியர் நலன்புரிச் சங்க போசகருமான றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.
இதன்போது ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள், இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பரீட்சைகளில் சித்திபெற்ற மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள், உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகள், இசை நிகழ்ச்சி முதலானவை சிறப்பாக நடைபெற்றன.

மேலும் அண்மையில், அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாக கொண்டு இயங்கிவரும் Women Icon Times Women மற்றும் world Women கவுன்சில் "முன்மாதிரியான பெண் தலைமைத்துவத்திற்கான விருதை" வென்று நாட்டிற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.
தொடர்ந்து, ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள், இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பரீட்சைகளில் சித்திபெற்ற மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளை மகிழ்வூட்டும் பொருட்டு சுவாரஸ்சியமான விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), மாவட்டச் செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், இடமாற்றலாகிச் சென்ற அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் அவர்தம் பிள்ளைகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.









# ஒக்டோபர் மாதத்திற்கு முதல் அனைத்து வீதிகளும் பூரணப்படுத்தப்பட வேண்டும்!

## கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரால் அதிகாரிகளுக்கு பணிப்பு!!



மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை புனரமைப்பு செய்யப்படாமல் மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் காணப்படும் வீதிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் உயர் மட்ட அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல் இன்று மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன் அவர்களின் எற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (03) திகதி நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தினை மணல் வீதியற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சரால் இதன் போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் வீதிகள் அமைக்கும் போது சனத் தொகை மற்றும் நில அமைப்புளை ஆராய்ந்து தரமான வீதிகளை அமைப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும், வெள்ள நீர் வடிந்தொடுவதற்கு தடையாக உள்ள காரணிகளை அடையாளம் கண்டு இறுக்கமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் எதிர் காலத்தில் வெள்ள பாதிப்பு ஏற்படாதவாறு வீதிகளை அமைக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சரினால் ஆலோசனைகள வழங்கப்பட்டது.

வீதிகள் தேவைப்பாடுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிறவள் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருந் தால் அந்த வளங்களை பயன்படுத்தி வீதிகளின் தூரத்தை அதிகரிக்க முடியுமெனவும், மண் முனைப்பற்று மற்றும் காத்தான்குடி உள்ளிட்ட நகர் பிரதேசங்களிலும் வீதி தேவைப்பாடுள்ள கிராமங் களை இனங்கண்டு பிரதேச செயலககங்களின் தொழில்நுட்ட உத்தியோகத்தர் ஊடாக விரைவாக மதிப்பீட்டறிக்கைகளை சமர்ப்பித்து, எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முதல் வீதிகளை நிறைவு செய்து மக்கள் பாவனைக்காக கையளிக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் இதன் போது அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார்.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மாவட்ட பொறியியலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதிஸ்குமார், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.






# எங்களிடம் “டீல்“ அரசியல் இல்லை! சஜித் சூளுரை



நாங்கள் எவருடனும் “டீல்“ அரசியல் செய்யவில்லை. அரச கட்டமைப்பில் நிலவி வரும் ஊழல், மோசடி, திருட்டு முற்றிலும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கையில், ”புத்தாண்டில் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டாலும், 2 கோடி 20 இலட்சம் மக்கள் மிகவும் அவலமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், சமீபத்தில் ஒரு குடும்பம் தற்கொலை செய்து கொண்டது. இந்நேரத்தில் மனிதனை மரணப் படுக்கைக்கு கொண்டு செல்வதை விடுத்து மனிதனை வாழ வைப்பதே எமது கடமையாக இருக்க வேண்டும். இந்நாட்டு மக்கள் யாருக்கும் அடிமைகளாக இருக்கக் கூடாது.தாங்களாகவே எழுந்து நிற்கும் சூழலை உருவாக்க வேண்டும். அரச கட்டமைப்பில் நிலவி வரும் ஊழல், மோசடி, திருட்டு முற்றிலும் இல்லாதொழிக்கப்பட வேண்டும். தற்போதைய அரசு பல்வேறு கொடுக்கல் - வாங்கல்கள் மூலம் வங்குரோத்து நாட்டில் இருந்து கொண்டே டொலர்களைக் கூட திருடி வருகின்றது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கடந்த விடுமுறைக் காலத்தில் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டு குடும்பமாக மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்தினாலும், வீதிகளில் செல்லும் ஏழைகள் உட்பட அனைத்து குடிமக்களும் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம், குடும்ப அடிப்படையிலான குடும்ப அலகுகளில் 60 சதவீத வருமானம் குறைந்துள்ளது. 90 சதவீத குடும்ப அலகுகளின் செலவினம் அதிகரித்துள்ளது. இந்த வங்குரோத்து நிலையிலும் சுமார் 3.4 சதவீதமானோர்களின் வாழ்க்கை மட்டம் உயர் நிலையை எட்டியுள்ளது. இவர்கள் சமூகத்தின் உயர் வகுப்பினர்” என்றார்.

# வட்டுக்கோட்டை இளைஞரின் மரணம் மனித ஆட்கொலை!

**யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் கொடூரமான சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்த இளைஞரின் மரணம்” மனித ஆட்கொலை” என யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.** வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸாரின் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார். அது தொடர்பான வழக்கு விசாரணையாழ். நீதிவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது. மேற்படி வழக்கு நேற்று செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இளைஞரின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றுக்குக் கிடைக்கப்பெற்றது. அதில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞரின் உடலில் காணப்பட்டன எனவும், இதனால் உயிரிழப்பு நேர்ந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வழக்கு விசாரணை களில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் முகத் தோற்றளவில் இளைஞரின் உயிரிழப்பு, ”மனித ஆட்கொலை” என்று நீதிவான் மரண விசாரணை கட்டளையின்போது குறிப்பிட்டார். மேலும் இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்தனர் என்று தெரிவித்த நிலையில், இதுவரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றைய சந்தேகநபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்து மாறு இந்த வழக்கின் விசாரணைப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தர விட்டார். அத்துடன் மேற்படி குற்றத்தில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்றக் கட்டளையின் பிரதியைப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறும் மன்று கட்டளை யிட்டது.மேலும், குறித்த வழக்கு விசாரணை ஆவணங்களைச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பாரப்படுத்துமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் அறிவுறுத்தினார்.அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்க மறியலை எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் நீதவான் நீடித்துள்ளார்

# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களை தற்போதைய வரி மேலும் துன்புறுத்துகிறது!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. விசனம் தெரிவிப்பு!



இந்த நாட்டில் வரி விலக்கு ஏற்பட் டிருந்த நிலையில் தற்போது வரி விதிப்பு என்பது பொருளாதார ரீதியில் பாதிக் கப்பட்டுள்ள மக்களை பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கியுள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பில் அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார். மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்து

கொண்டு கருத்துத்தெரிவிக்கையில் குறித்த வரி அமுல்படுத்த பட்டிருக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஈவினையின்றி செயல்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளனார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வரி விதிப்பு என்பது நாட்டின் வளர்ச் சிக்கு என்பதில் எமக்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் தற்போது நாட்டில் ஏற்பட் டுள்ள அசாதரரண சூழ்நிலை நிமித்தம்

மக்களின் பொருளாதாரத்தில் இருந்து இந்த வரி விலக்கு அமுல் படுத்தப்பட்டிருக்கின்றமை தேவையற்ற ஒரு விடயமாக காணப்படுகிறது. இந்தவருடத்திலாவது அரசு கவனம் செலுத்த வேண்டும். இந்த வரி விதிப்பை மிக குறைவான மதிப்பீடு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இனப்பிரச்சினைத் தீர்வையும் அரசு நடைமுறைக்கு வரும் வகை யில் செயல்படுத்தப்பட வேண்டும். - என்றார்.

# யாழ் உடுப்பிட்டியில் உள்ள மதுபான சாலைக்கு எதிராக கண்டனப் போராட்டம்!

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு எதிராக கண்டனப் போராட்டம் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது. உடுப்பிட்டி சந்தியில் நடைபெற்ற போராட்டத்தில் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பகுதியில் கடையடைப்பும் இடம்பெற்றது. உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீள திறக்கப்பட்ட மதுபானசாலையினால் கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை உடனடியாக அகற்றக்கோரி உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடைகளை பூட்டி கடையடைப்பிற்கு உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் ஒன்றாக சேர்ந்து அழைப்புவிடுத்தது. போராட்டத்தின் இறுதியில் பிரதேச செயலகத்திற்கு பேரணியாக சென்று ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கப்படவுள்ளதுடன் அதன் பிரதிகள் பல்வேறு தரப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.









# அன்புடையீர் வணக்கம்

**வீரத்தமிழ்மகன் முத்துக்குமார் நினைவுநாள் (29.01.2024) நெருங்கும் நிலையில், உங்கள் கனிவான பார்வைக்கு இந்த மடலை தோழமையுடன் அனுப்புகிறோம்.**




தன்னுடைய ஈடு இணையற்ற உயிர்த்தியாகத் தாலும், அளவிட இயலாத அறிவாற்றலாலும் உலகெங்கும் தமிழினத்தை தலைநிமிரச் செய்த அந்த மாவீரனின் நினைவு நாளில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என அனைத்து எல்லைகளை யும் கடந்து தமிழர்களை ஒன்று திரட்டி வீரவணக்கம் செலுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள் ளோம்.

சென்னை கொளத்தூரில் முத்துக்குமாரின் திருவு டல் வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் 27 அடி உயர மலர்த்தூண் ஒன்று வீரவணக்க நிகழ்வுக்கென்றே நிறுவப்படுகிறது. தமிழீழ சொந்தங்களுக்காக உயிர் தியாகம் செய்த முத்துக்குமார், முதல் நெருப்பு அப்துல் ரவூப், ஈகி முருகதாசன், தோழர் செங்கொடி, காவிரிச்செல்வன் விக்னேஷ் முதலான 27 ஈகியர் நினைவாக அந்த மலர்த்தூண் அமைக்கப்படுகிறது.

29.01.2024 திங்கட்கிழமை காலை 10.07 மணியள வில், முத்துக்குமார் உயிர்த்தியாகம் செய்த அதே நேரத்தில் மலர்த்தூணுக்கு மலர்வணக்கத்தோடு வீரவணக்க நிகழ்வு தொடங்கும். அவர்களை தொடர் ந்து நீங்களும் உங்களை தொடர்ந்து நாங்களும், அதை எடுத்து ஆயிரக்கணக்கானோர் மெழுகுவர்த் திகளை ஏந்தி, அந்த தியாகத் திருவிளக்குகள் நம் நெஞ்சில் மூட்டிய அக்கினிக் குஞ்சை நினைவூட் டும் நிகழ்வு.

எவரும் பேசாமல், முழக்கங்கள்இல்லாமல், அந்த வீரத்தமிழ்மகனின் மரண வாக்குமூலம் மட்டுமே பின்னணியில் ஒலித்து கொண்டிருக்க, மௌனமலர் அஞ்சலியாக இந்த நிகழ்வு நடைபெறும் என்பதை அன்போடு தெரிவித்து கொள்கிறோம்.

தமிழீழம் காக்க தம்முயிர் ஈந்த ஈகியர் முத்துகுமார் முதலான 27 மாவீரர்களின் மனசாட்சியோடு நாம் ஒவ்வொருவரும் மனம்விட்டு பேச வாய்ப்பளிக்கும் விதத்தில் கனத்த அமைதியுடன் நாம் வீரவணக்கம் செலுத்த இருக்கின்றோம்.
வீரத்தமிழ்மகன் முத்துகுமாரின் குடும்பத்தினர் மட்டுமின்றி, தமிழகத்தை சேர்ந்த மாவீரர்களின் குடும்பத்தினரையும் இந்த நிகழ்வில் பங்கேற்க அழைக்க உள்ளோம்.

முத்துகுமாரின் திருவுடலுக்கு வீரவணக்கம் செலுத்தத் திரண்ட ஒவ்வொருவரையும் இந்த நிகழ்வுக்கு உரிமையுடன் அழைக்க வேண்டியது எங்கள் கடமையாகிறது. அந்த தமிழர் பெருங்கூட்டம் சிந்தாமல் சிதறாமல் அப்படியே இருக்கிறது என்பதை உறுதி செய்வது ஒன்றே இந்த வீரவணக்க நிகழ்வின் நோக்கம். நீங்கள் மட்டுமின்றி உங்கள் அமைப்பும் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்று உரிமையுடன் அழைக்கின்றோம்.

இந்த நிகழ்வை பொறுத்தவரை நிகழ்வை ஒருங்கிணைக்கும் நாங்கள் வெறும் நார் மட்டுமே. மலர்களாகிய நீங்கள் தான் இதை மாலையாக்க முடியும். எனவே 2024 ஜனவரி 29 காலை 9 மணியளவில் நிகழ்வில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை உரிமையோடும் உண்மையோடும் அன்புடன் அழைக்கிறோம்.
நன்றி

இப்படிக்கு,
தோழமையுடன் வீரத்தமிழ்மகன் முத்துக்குமார் வீரவணக்க நிகழ்வுக்குழு
9600094493